உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 7 ‖ அக்டோபர் 1925 ‖ பகுதி 10

தெய்வ வணக்கம்.

மாறாத பேராசை வேரோடி நீள்பாச
வனமதின் முளைத்தெழுந்து
வளர்பெண்டு பிள்ளைகள் எனுங்கவர் விரித்தறிவு
வண்டழைக்ளைச் சொரிந்து
வேறான சுற்றமாம் பறவைக்கு ழாங்கட்கு
மேவுமிட மாகிநின்று
வெய்யகா மாதியலர் விரவியுறு பாவநறை
வீசிமத மாங்கனிபழுத்
தாறாத கவலை ப்ரசண்டவெங் காற்றினால்
அலையுமிவ் வாழ்வாமரம்
அதுகூற்றெனுந்தச்ச னார்கைப் படாமுனுன
தடியிணை கொடுத்தென்னையாள்
சேறுடு குங்குமக் களபமணி பூண்முலைத
தெய்வருஞ் சரிமணாளா
செயமிகுத் தலைவுதிரு மயில்வயப் பரியில்வரு
சிவகிரிக் குமரகுருவே.

(மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.)

ஹரிநாமோபதேசம்.

குரு:— மாணவனே! சகல பதார்த்தங்களையும் நாராயண ஸ்வரூபமென்று அறிந்துகொள்.

மாணவன்:—அப்படியே. வந்தனம்-என்று விடைகொண்டு வெளியேபோனான். அவன் போனவழியில் அழகாக அலங்கரிக்கப்பட்ட கோவில் யானையொன்று வந்தது. அதன்மேல் பாகனிருந்தான். தவிர "யானை வரும் பின்னே மணியோசைவரும் முன்னே" என்னும் பழமொழிக்கிணங்க மணியோசை டாண்! டாண் என்று கேட்டது.

இப்படி யானை வருவதைக்கண்ட மாணவன், சற்றும் விலகாமல் அதற்கு நேராகவே சென்றான். அதுகண்ட யானைப்பாகன், "யாரடா! விலகு! விலகு!" என்று கூவினான். மாணவன், "நானும் நாராயணன்! யானையும் நாராயணன்! அது என்னை என்ன செய்யும்?" என்றெண்ணிக்கொண்டு விலகாமல் நேரே சென்றான். யானை அருகே நெருங்கியதும் துதிக்கையால் தூக்கி அவனை அப்பால் எறிந்துவிட்டுச் சென்றது.

மாணவனுக்கு உடம்பிலும் முழங்காலிலும் நன்றாயடிபட்டுக் காயமுண்டாய் இரத்தம்பெருக ஆரம்பித்துவிட்டது. பிறகு அவன் அழுதுகொண்டே சமாளித்தெழுந்து மெதுவாய் நடந்து தன் குருவினிடம்போய், நடந்ததைச் சொல்லி, "உமது உபதேசம் வீணாயிற்று" என்றான். குரு, "உபதேசம் வீணாயிற்றென்று உளறாதே! கேட்டவர்கள் நகைப்பார்கள். நீ யானையாகிய

நாராயணனுக்கு நேரே போனபோது, யானைபின்மேலிருந்த பாகனாகிய நாராயணன், உன்னை விலகு! விலகு! என்று உத்தரவிட்டானல்லவா?—நீயேன் அந்த நாராயணன் பேச்சைக் கேட்கவில்லை. இது உன் மூடத்தனந்தானே?" என்று கூறியனுப்பினார்.

(2) காலமே கருந்தனம்-காலத்தை வீணே கழிக்காதே!

"மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை
ஐம்ப திரவில் அகலும் துயிலினால்
ஒட்டிய இளமையால் ஒரைந்து நீங்கும்
ஆக்கை இளமையில் ஐம்மூன்று நீங்கும்
எழுபது போக நீக் கிருப்பன முப்பதே— (அவற்றுள்)
இன்புறு நாளும் சிலவே யதாஅன்று
துன்புறு நாளும் சிலவே ஆதலால்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும் இன்னும்
நாளை நாளை யென்பீ ராகில்
எப்போதாயினும் கூற்றுவன் வருவான்."

ஆதலால் காலத்தை வீணாகக் கழிக்காமல் நல்ல வழியில் செலவிடவேண்டும். காலத்தை நல்ல வழியில் செலவிடுபவன் இடர்ப்படான். காலத்தை வீணே கழிப்பவன் காலஹத்தி செய்தவனாவான். அது பிரமஹத்தி பாவத்தினும் கொடிதாகும்.

இரத்தினம்பாள் அல்லது முத்தமாலை	ரூ.	1	0	0
பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு		0	12	0

ஸ்காந்தம்

சீரும் திருவும் திறனும் பெருவாழ்வும்
சேரும் ஒருவற்குச் செய்தவத்தால்—சேருமிவை
யாவும் அவத்தால் அழியுமிது காந்தமெனும்
தேவியல்நல் நூலதனில் தேர்

ஆதிகாலத்தில் காசிபர் என்னும் பெயர்கொண்ட மகரிஷி ஒருவர் இருந்தார். அவர்க்கு மாயை என்பவளிடம் மூன்று அசுரர் பிறந்தனர். அவர்கள் சூரபன்மன், தாருகன், சிங்கமுகன் என்னும் பெயர்கொண்டிருந்தனர்.

அவர்கள் தக்க வயதை அடைந்ததும், அவர்களுடைய அன்னை மாயை என்பவள் அவர்களை அருகிலழைத்து, "நீங்கள் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யுங்கள். சிவபெருமான் தம்மிடம் பக்தியுடையவர்க்கு அவர்கள் விரும்பிய வரங்களையெல்லாம் அளிக்கவல்லவர். அவரே நாம் வழிபடத்தக்க கடவுள்" என்று தெரிவித்தாள்.

அப்பால் அசுரர்கள் மூவரும் தங்கள் அன்னையின் உபதேசப்படி சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தனர். அவர்கள், வேறு எவராலும் செய்ய இயலாத அரிய தவம் செய்தபடியால், சிவபெருமான் மகிழ்ந்து அவர்கள் மூவர்க்கும் காட்சி தந்தார். ஜகதீசனுடைய காட்சி கண்ட அவர்கள் பரமானந்தமடைந்து பணிந்து துதித்தார்கள். ஜகதீசன் அவர்களைப்பார்த்து, "உங்களுடைய தவங்கண்டு நான் மகிழ்ந்தேன். உங்களுக்கு வேண்டும் வரமென்ன?" என்று வினவினார்.

அசுரர்கள், "மகாதேவ, எங்களுக்கு எந்தக் காலத்திலும் அழிவுண்டாவது கூடாது. எந்த ஆயுதங்களாலும் தீங்குண்டாகாத வஜ்ரதேகம் எங்களுக்குண்டாதல் வேண்டும். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நாங்களே ஆளவேண்டும். யாவராலும் அடைதற்கரிய பெருஞ்செல்வமும் நாங்கள் அடையவேண்டும்" என்று கேட்டனர்.

சிவபெருமான், அவர்களுடைய ஆசையைக்கண்டு உள்ளுக்குள் நகைத்து, "நல்லது, நீங்கள் விரும்பியபடியே வரந்தந்தோம். ஆனால் எந்தக்காலத்தில் நீங்கள் நீதி தவறுகிறீர்களோ அந்தக்காலத்தில் உங்கள் தவப் பயனழியும்" என்றுகூறி அவர்களுக்கு இந்திரஞாலம் என்கிற தேரும் மிகுந்த வன்மையுள்ள சிங்கவாகனமும் அண்டங்களைக் காக்கவல்ல சக்ராயுதமும் கொடுத்து மறைந்தருளினார்.

பிறகு அசுரர் மூவருக்கும் சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தின்படி சகல பாக்யங்களும் உண்டாயின. அவர்கள் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆளத்தக்க பராக்கிரமசாலிகளாயினர்; இவர்களுக்கு ஒப்பானவரும் உயர்வானவரும் இவர்களை எதிர்ப்பவரும் இல்லை என்று எவரும் பேசி வியப்படையும்படி அவர்கள் விளங்கினர்.

இவ்வாறு எவரும் அடைதற்கரிய பெருமைகளை அடைந்ததும் அவர்கள் மூவரும் இறுமாப்படைந்து, சிவபெருமானுடைய பெருமையையும் உபதேசத்தையும் மறந்து தங்கள் மனம்போனபடி நடக்கத் துணிந்தனர். பாவ புண்யங்களைப்பற்றி அவர்கள் நினைப்

படுதே இல்லை. பழிக்கும் பழிப்புக்கும் அஞ்சாத நெஞ்சுடையவர்க ளானார்கள். நல்லவர்களையும் பெரியவர்களையும் அவமதித்து, அவர்களெல்லோரும் அருவருக்கும்படி நடந்து வந்தார்கள். தேவர்களிடத்திலே பகைகொண்டார்கள்; அவர்களை அடிக்கடி எதிர்த்துச் சண்டையிட்டுத் தங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்துகொண்டார்கள்.

இப்படிக் கொடுமைகள் பல செய்யவே பிரமாதி தேவர்களும் அவர்களுக்கு அஞ்சி அவர்கள் ஏவும் ஏவல்களைச் செய்து வந்தார்கள். அநேக தேவர்கள் அவர்களுக்குக் கடலில் மீன் பிடித்துக்கொடுத்துத் தங்கள் வாழ்நாட்களைக் கழித்து வந்தார்கள். சூரபன்மனுடைய ஆக்ஞை என்றால் எவரும் நடுங்குவார்கள். சூரபன்மன் என்பவன் தென்கடலில் இலங்கைக்குத் தெற்கே மகேந்திரபுரி என்கிற தீவிலிருந்து அரசுபுரிந்தான். சிங்கமுகன் என்பவன் வடக்குக்கடலில் ஆசுரம் என்னும் ஒரு நகரிலிருந்து வந்தான். தாரகாசுரன் இமயமலைக்கருகில் நாவலந் தீவில் மாயாபுரியிலிருந்து அரசு செய்தான்.

இவர்களுடைய கொடுங்கோல் அரசாட்சியினால் உலகமெல்லாம் கதறும். எல்லோரும், "ஜகதீசா! இந்தக்கொடிய பாவிகளிடம் அகப்பட்டுக்கொண்டு இப்படி வருந்த நாங்கள் என்ன பாபம் செய்தோம்? இந்தத் துராத்மாக்களிட மிருந்து நாங்கள் விடுபடுவ தெந்த நாள்?" என்று இரவும் பகலும் ஈசனை வணங்கித் துதிப்பார்கள்.

இப்படி அசுரருடைய அரசாட்சி நடந்து வருகையில் ஒருநாள் சூரபன்மன் தேவர்களுக்கு வேந்தனாகிய

தேவேந்திரனுடைய மனைவியைப் பிடித்துக்கொண்டு வர ஏவலாளரை அனுப்பினான். இச்செய்தி அறிந்த தேவேந்திரனும் அவன் மனைவியும் குயிலைப்போல் உருவங்கொண்டு பறந்து பூலோகம் வந்து சீர்காழியிலே ஒளிந்து கொண்டார்கள். அதனால் சூரபன்மன் சினமடைந்து, தன்மகன் பானுகோபன் என்பவனைக் கொண்டு இந்திரனுடைய மகன் ஜயந்தன் என்பவனையும் அவனுக்குத் துணையாயிருந்த தேவர்கள் பலரையும் சிறைசெய்து விட்டான்.

இப்படியாகவே, பிரமாதி தேவர்கள் எல்லோரும் கைலாசகிரிக்குப் போய்ச் சிவபெருமானை வணங்கி முறையிட்டார்கள். சிவபெருமான் அவர்களுக்குக் காட்சி தந்து, "நீங்கள் இனி அஞ்சவேண்டாம். விரைவில் அசுரர்களை அழித்து உங்களைக் காப்பாற்றுகிறோம்" என்று கூறி அபயமளித்து அனுப்பினார்.

அவர்கள் சென்றபிறகு சிவபெருமான் கிருபை கூர்ந்து ஆறு திருமுகம் கொண்டார். சிவபெருமானுக்கு நெற்றியிலே ஒரு கண்ணுண்டு. ஆகையினால் அந்த ஆறு திருமுகங்களிலுமுள்ள ஆறு நெற்றிகளிலும் ஆறு கண்களிருந்தன. பகவான் அந்த ஆறு கண்களிலிருந்து ஆறு தீப்பொறிகளை யுண்டுபண்ணினார். அந்தத் தீப்பொறிகளைக் கண்டு பக்கத்திலிருந்த பார்வதிதேவியார் திடுக்கிட்டு எழுந்து சற்று விலகினார். அப்பொழுது பார்வதி தேவியாரின் திருவடிச்சிலம்பிலிருந்து ஒன்பது மணிகள் உதிர்ந்தன. அந்த ஒன்பது மணிகளையும் சிவபெருமான் பார்த்தார். பார்த்த மாத்திரத்தில் ஒன்பதும் ஒன்பது சக்திகளாயின. அந்த ஒன்பது சக்தி

களின் உடல் வேர்வையிலிருந்து இலக்ஷம் வீரர்களுண் டாயினர். அப்பால் அந்த ஒன்பது சக்திகளும், வீர பாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேசன், வீரபுரந்திரன், வீரராக்ஷஸன்,வீரமார்த்தாண்டன்,வீர ராந்தகன், வீரதீரன் என்னும் ஒன்பது வீரர்களைப் பெற்றார்கள்.

இதற்கப்பால் சிவபெருமான் அக்னிதேவனையும் வாயுதேவனையும் வரவழைத்து, தமது நெற்றிக்கண்களி லிருந்துண்டான ஆறு பொறிகளையும் கங்கையிலே கொண்டுபோய் விட்டுவிடும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டார். அவர்கள் அப்படியேசெய்தனர். கங்கைஅந்தப் பொறிகளைத் தாங்கமுடியாமல் சரவணப் பொய்கை யிலே கொண்டுபோய் ஒதுக்கியது. அங்கே அந்த ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகளாயின. அதைக்கண்ட தேவர்களெல்லோரும் பெருமகிழ்ச்சியடைந்து மங்கள கீதம் பாடி வாழ்த்தினார்கள். தேவதுந்துபிகள் முழங் கின.

இவ்வாறு அவதரித்த ஆறு குழந்தைகளும் கார்த் திகைப் பெண்களாகிய ஆறு பேரிடத்திலும் பாலுண்டு மகிழ்ந்து அநேக திருவிளையாடல்கள் செய்தன. அப் படியிருக்கையில், சிவபெருமான் பார்வதி தேவியா ரோடு அந்தப் பொய்கைக்கு வந்தார். அதில் விளையாடும் குழந்தைகளைக்கண்ட பார்வதி தேவியார் அதிக ஆவ லோடு அவைகளைச் சேர்த்து வாரி எடுத்தார். சேர்த்து எடுத்தவளவில் அவை ஆறும், உடலொன்றும் முகம் ஆறுமாக ஓர் உருக்கொண்டது. அப்பொழுது அந்தக் குழந்தையின் அழகைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான்

அதற்கு ஸ்கந்தன் என்று திருப்பெயர் சூட்டியருளினார். பார்வதிதேவியார் அந்தக் குழந்தைக்குப் பால் கொடுத்துத் தமக்கும் சிவபெருமானுக்கும் நடுவே வைத்துக் கொண்டார். அப்பால் சிவபெருமான் விருஷபவாகனத்தி லேறிக்கொண்டு கைலாசகிரிக்கு எழுந்தருளினார்.

அங்கே போனதும் ஷண்முகக் கடவுளாகிய குழந்தை அநேக திருவிளையாடல்களைச் செய்தது. அதைக்கண்டு தேவர்களெல்லோரும் அதிசயமடைந்தனர். மகாதேவனுடைய திருக்குமாரனானபடியால், ஷண்முகப்பெருமானுடைய லீலைகள் பிரமிக்கத் தக்கவைகளாயிருந்தன.

இச்சமயம் சிவபெருமான் தேவர்களுடைய குறையை நீக்கத் திருவுளங்கொண்டார். தேவர்களுக்கிருக்கும் குறையென்ன? சூரன் முதலிய அசுரர்கள்செய்யும் கொடுமையல்லவா? ஆகையினால் பகவான் அந்த அசுரர்களை ஒழிக்கத் திருவுள்ளங்கொண்டு ஸ்கந்த மூர்த்தியைத் தம்பக்கம் அழைத்து, "ஸ்கந்தா, நீ தேவர்களுடைய சேனைக்கு அதிபதியாயிருந்து சூரன், சிங்கன், தாருகன் என்னும் அசுரர்களை வென்றுவா" என்று கட்டளையிட்டு சக்தி வேலாயுதம் ஒன்று கொடுத்தனுப்பினார்.

பாலஷண்முகன், "அப்படியே செய்கிறேன்" என்றுகூறித் தாய் தந்தையரை வணங்கி விடைகொண்டு புறப்பட்டார். அவர் புறப்படவே அவரோடு இரண்டாயிரம் வெள்ளம் பூதகணங்கள் புறப்பட்டன. முன் தோன்றிய லக்ஷம் வீரர்களும் வீரபாகு முதலிய நவ வீரர்களும் புறப்பட்டனர்.

புறப்பட்டுவரும் வழியில் பகவான் மாயாபுரியி லிருந்த தாரகனை எதிர்த்துச் சண்டைசெய்து அவனை ஸம்ஹாரம் செய்தார்; அப்பால் தெற்கே வந்து திரிச் செந்தூரிலே தங்கி, வீரபாகுவை அழைத்து, "நீ சூர பன்மனிருந்து அரசுபுரியும் வீரமகேந்திரபுரம் போய் அவனைக் கண்டு, நீ தேவர்களைச் சிறையிலிருந்து விடு வித்து நீதிதவருமல் அரசுபுரியவேண்டும். இல்லாவிட் டால் உன் செல்வமும் உன் அரசும் உன் குலமும் அழி வது திண்ணம். நீயும் வாழமாட்டாய் என்று நாம் சொன்னதாகச் சொல்லிவிட்டுவா" என்றுகூறித் தூத னுப்பினர்.

வீரபாகுதேவர் ஷண்முகப் பெருமானுடைய கட்டளையை வணக்கத்தோடு ஏற்றுக்கொண்டு உடனே புறப்பட்டுக் கடல் கடந்து இலங்கைக்குப்போய், அப் பால் அங்கிருந்த வீரமகேந்திரம்போய்ச் சூரபன்மனைக் கண்டு பகவானுடைய கட்டளையைத் தெரிவித்தார். சூரபன்மன், "அவன் யார் கொஞ்சமும் அஞ்சாமல் நமக்குக் கட்டளையிடுபவன்? வந்தது வரட்டும். அவ னுக்கஞ்சி நாம் தேவர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்யோம்" என்று கூறிப் போர்புரிய ஆயத்தமானன்.

அப்பால் வீரபாகுதேவர் அங்கிருந்து திருச்செந் தூர் வந்து ஷண்முகப் பெருமானுக்குத் தாம் தூது போய் வந்த விவரம் தெரிவித்தார். அதைக்கேட்டதும் சிவகுமாரன் தமது சேனைகளுடன் புறப்பட்டு வீர மகேந்திரபுரம் போனர். சூரனிருக்கும் நிலைமையை அறிந்து முதலில் வீரபாகு தேவரைப் போர்செய்ய அனுப்பினர். சூரன் தன்மகன் பானுகோபனை அனுப்

பினான். வீரபாகு தேவருக்கும் பானுகோபனுக்கும் பெரிய யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் வீரபாகு தேவர் ஷண்முகப் பெருமானுடைய திருவருளால் பானுகோபனை வதஞ்செய்து வெற்றிகொண்டார்.

இதனால் பொறுக்க முடியாத துயரமடைந்த சூரபன்மன் கடுங்கோபங்கொண்டு தம்பி சிங்கமுகாசுரனைப் போருக்கனுப்பினான். சிங்கமுகாசுரன் நல்ல விவேகி. ஆகையினால் அவன் தன் அண்ணனைப் பார்த்து, "அண்ணா, நம்மோடு அமர்புரிய வந்திருப்பவன் தாம் கருதுகிறபடி பாலகனல்லன்; சிவபெருமானுடைய திருக்குமாரன். அவனை வெல்ல நம்மாலாகாது. ஆதலால் அவனோடு சமாதானஞ் செய்துகொள்வதே நாம் உய்வதற்கேற்ற வழி" என்று நல்லபுத்தி கூறினான்.

சூரபன்மன், அவ்வாறு கூறிய தம்பியின்மேல் சினங்கொண்டு திட்டி "என் கட்டளைப்படி போருக்குப் போய்வா" என்றனுப்பினான். சிங்கமுகாசுரன், 'எல்லாம் ஈசன் செயல்' எனப்புறப்பட்டுப்போர்க்களம் புகுந்தான். அவனை எதிர்க்க ஷண்முகப் பெருமானே முன் வந்தார். அப்பால் இருவருக்கும் கடுமையான யுத்தம் நடந்தது. சிங்கமுகாசுரன் மகா மாயைகளைச் செய்து ஸ்வாமியை ஏமாற்றப் பார்த்தான். அவனுடைய மாயைகளெல்லாம் ஆண்டவனிடம் பலிக்குமா? பலிக்கவில்லை. ஆகவே முடிவில் அவன் ஸ்கந்தநாதனுடைய திருக்கரத்தில் இலகும் சக்தி வேலாயுதத்திற்கு இரையானான்.

தம்பி இப்படி இறந்தசெய்தி கேட்டதும் சூரபன்மன் துக்கமும் சினமுங்கொண்டு அளவிட முடியாத சேனைகள் சூழப் பெரிய ஆர்ப்பாட்டத்துடன் போருக்கு

வந்தான். ஷண்முக நாதனும் தம்முடைய பூத கணங்களுடன் அவனை எதிர்த்தார். சூரபன்மன் அநேக வித மாயைகளினால் நின்றும் ஓடியும் மறைந்தும் வானத்திலிருந்தும் அநேகவிதமான அஸ்திர சஸ்திரங்களைப் பொழிந்தும் ரௌத்திராகாரமாய் யுத்தம் புரிந்தான். ஷண்முக மூர்த்தியும் அவனுக்குத் தக்கபடி சூழ்ச்சிகளைச் செய்துகொண்டு அஸ்திர சஸ்திரங்களை அமோகமாகப் பொழிந்து, மாயைகளினால் அவன் கொள்ளும் தோற்றங்களை யெல்லாமொழித்து அவனை ஏகாங்கியாக நிற்கச்செய்தார். சூரபன்மன் மனம் திகைத்து நிற்கையில், "ஓ பேதாய் சலனமற்ற நம்முடைய திருவுருவைத் தரிசிக்கக்கடவாய்" என்று கூறித் தமது விசுவரூபத்தைக் காட்டினார். அந்த ரூபத்தைக் கண்டதும், சூரபன்மன் ஞானோதயமடைந்து, முருகப் பெருமானை நோக்கி, "இதுவரையில் நான் தம்முடைய மகிமையையறியாமல் பாலன், சிறுவன் என்று அலக்ஷிய மாயிருந்தேன். தம்பி சிங்கமுகாசுரன் எனக்குத் தம்முடைய மகிமையைக்கூறி என்னைத் தடுத்தான். நான் அளவிறந்த செல்வத்தினாலும் நிகரற்ற பராக்கிரமத்தினாலும் செருக்கடைந்திருந்தபடியால் அவன் சொன்ன புத்திமதியை ஏற்றுக் கொள்ளவில்லை" என்று கூறித் துக்கித்தான். ஆண்டவன் அவனுக்கு மறுபடியும் முன் நிலையின் நினைப்பைக்கொடுத்து, பழையபடி பால குமாரனானார். சூரபன்மனும் முன்போல் தான் என்கிற கர்வங்கொண்டான். இருவருக்கும் வெகுநேரம் வரையில் போர் நடந்தது. அசுரர்களெல்லோரும் மடிந்தனர். அப்பால் சூரன் கடலின் நடுவே ஒரு பெரிய மாமரமாய் நின்றான். ஆண்டவன் அந்த மரத்தைத்

தமது வேலாயுதத்தினால் இருகூறாக்கினார். அப்பால் சூரபன்மன் முன்போல் தன் சுயரூபங்கொண்டு போர் புரிந்தான். அப்பொழுது ஆகாயமும் பூமியும் நடுங் கின. குமாரக்கடவுள், 'இனி இவனை மீறவிடக்கூடாது' என்றெண்ணி, வேலாயுதம் வீசி அவனுடைய மார்பைப் பிளந்து போர்க்களத்தில் அவனை வீழ்த்தினார்.

அப்படி இருபிளவான அசுரன் மயிலாகவும் சேவ லாகவும் உருக்கொண்டுவந்து ஆண்டவன் முன்நின்றான். சூரபன்மன் மகா தவமகிமை யுடையவனல்லவா? ஆத லால் பகவான் அவனைத் தன் கருணைக்கண்களாலே பார்த்து அவனுக்குச் சிவஞானம் உண்டாகும்படி செய் தார். அவன் உடனே சரவணபவமூர்த்தியை வணங்கி வாழ்த்தினான். கிருபாநிதியாகிய ஸ்கந்தன், மயிலைத் தமக்கு வாகனமாக்கிக்கொண்டார்; கோழியைத் தமக்கு கொடியாக்கிக் கொண்டார்.

இப்போது மகா விஷ்ணு, முதல் பிரமாதி தேவர்க ளெல்லோரும் நிர்ப்பயமாக வெளியேவந்து ஆண்டவனை வணங்கித் துதித்து வாழ்த்தினார்கள்; ஆடிப்பாடி மலர் மாரி பொழிந்தார்கள். பிறகு பகவான் எல்லோருட னும் புறப்பட்டுத் திருப்பரங்குன்றம் வந்து சேர்ந்தார். இங்கே இந்திரனுடைய கட்டளைப்படி தேவதச்சனாகிய விசுகர்மா பகவானுக்கு ஓர் ஆலயம் கட்டினான். அதில் ஆண்டவன் எழுந்தருளி எல்லோருக்கும் தரிசனமளித் தார். இச்சமயம் தேவேந்திரன் ஆண்டவனுடைய ஸந் நிதானத்துக்கு வந்துவணங்கிநின்று, "எங்கள் குறையை நீக்கியாண்ட இறைவனே, எனது புதல்வியாகிய தெய்வ யானையை மணஞ்செய்து கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். ஆண்டவன் திருவுள்ளம் மகிழ்ந்து

அங்கே தெய்வயானை அம்மையாரை மணஞ்செய்து கொண்டார்.

அதன்பின் ஆறுமுகப் பெருமான் தெய்வானை ஸமேதராய், சகல தேவர்களும் சூழ்ந்துவரக் கைலாச கிரிபோய்ச் சிவபெருமானை வணங்கினார். சிவபெருமானும் பார்வதிதேவியாரும் ஸந்தோஷமடைந்து மைந்தனையும் மருமகளையும் வாழ்த்தினர். தேவர்களை நோக்கி அவரவரிருப்பிடம் போய்ச் சுகமாய் வாழும்படி கட்டளையிட்டனுப்பினார்.

இதற்கப்பால் கந்தநாதன் கந்தமாதன பர்வதம் வந்து அங்கிருந்து புறப்பட்டு வள்ளிமலைச்சாரலை யடைந்தார்; அங்கே வேடர்குலத்தில் அவதரித்திருந்த வள்ளி நாயகியை மணஞ் செய்துகொண்டு திருத்தணிகையிலே திருக்கோயில் கொண்டருளினார்.

குழந்தைகளே தவத்தினால் சூரபன்மனும் அவன் தம்பிமார்களும் அடைந்த பாக்கியங்களைக் கவனித்தீர்களா? அவ்வளவும் அவர்கள் செய்த அவத்தால் அதாவது ஒழுக்கந் தவறிச் செருக்குற்று மனம் போனபடி நடந்தபடியால் எப்படியாயிற்று பாருங்கள். ஆதலால் தவத்தைப்போல் எல்லாந்தரவல்லது எதுவுமில்லை. அவத்தைப்போல் எல்லாவற்றையும் அழிக்கவல்லது எதுவுமில்லையென்று அறியலாகும்.

நன்மொழி-உயர்ந்த பதவியடைந்தாலும் பெரியோர்களை அவமதியாதே. அவமதித்தால் நகுஷன் என்னும் வேந்தன் அடைந்த கதியை அடைவாய்.

வைத்திய விஷயம்

டாக்டர் எஸ். எம். சர்மா என்பவர்
முன்னொரு முறை பத்திரிகையில் எழுதிய விஷயமிது.

வெள்ளாட்டுப் பாலின் பிரயோசனம்

செம்மறி ஆடு, வெள்ளாடு என இருவகை யாடுகளில் வெள்ளாடு செம்மறியாட்டைக் காட்டிலும் உயரமாயும், புஷ்டியாயும், சுறுசுறுப்புள்ளதாயு மிருக்கும். இதன் பால் மிக உருசியுடையது. நம் தேகத்திற்குப் புஷ்டி தரக்கூடியது. பசுவின் பாலுக்கும் எருமைப் பாலுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவு வித்தியாசம் வெள்ளாட்டின் பாலுக்கும் செம்மறியாட்டின் பாலுக்கும் உண்டு.

(2) நம் சுதேசிய வைத்தியத்தில் வெள்ளாட்டின் பால் மெத்தவும் கையாளப்படுகிறது.

(3) காலை 7-மணிக்குள் இவ்வாட்டின் பாலைக் கறந்து அதைச் சுத்தமான வெள்ளை வஸ்திரத்தில் வடிகட்டி முப்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் காற்படி பாலும் அதற்குக் கீழ்ப்பட்டவர்கள் அரைக்காற்படி பாலும் கொஞ்சம் பத்தியத்துடன் ஏழுநாள் சாப்பிட்டு வந்தால் மேலே தேக சம்பந்தமான வியாதி யாதொன்றும் அணுகாது. ஆறு மாதத்திற்கு ஒரு தரம் நாம் இதைச் சாப்பிட்டால் தேகத்திற்கு மிகவும் நல்லது.

(4) பல வீனர்களும் வியாதி உள்ளவர்களும் குணமடைய வேண்டுமென்ற எண்ணமிருந்தால் அடியில் வருவனவற்றைக் கவனிப்பாராக:—

a. தேகத்தில் உள்ள சொறிகளுக்கும் தூர் நீருக்கும், சொறிந்தால் தடிப்பதற்கும், இந்த ஆட்டின்பாலை ஒருவாரம் காலையில் மேலே சொல்லியபடி சாப்பிடவும்.

b. நீர்க்கடுப்பு, மூத்திர துவாரத்தில் உண்டாகும் எரிச்சல், நீரிழிவு முதலான வியாதிகளுக்கு இதைப் பன்னிரண்டு நாள் சாப்பிடவும்.

c. உடம்பில் நீர் ஏற்றலுக்கு மண்டூரத்தை வெள்ளாட்டின் பாலில் தேய்த்துக் கொடுக்கவும்.

d. மலச்சிக்கலை இது ஏழு நாளில் கண்டிக்கும்.

இதற்குப் பத்தியமாவன:—புளிசேர்க்கக்கூடாது. நல்லெண்ணெய், உளுந்து நீக்கவும். காபிக்குப் பதிலாக சோடா சாப்பிடலாம். தலையைச் சீவிக் கொள்ளுபவர்கள் தைலம் தடவிச் சீவிக்கொள்ளலாம். பசுமோர் சேர்த்துக்கொள்ளலாம். பழையமுது கூடாது. ஒத்துக்கொண்டால் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். எண்ணெய்க்குப் பதில் வால் மிளகுதேய்த்துக் கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு:—வியாதியஸ்தர்கள் இதை மீறி நடக்கக் கூடாது. அவ்விதம் செய்தால் கெடுதிகள் உண்டாகும். குளிர்ந்த தேசத்தில் உள்ளவர்கள் எவ்விதமேனும் செய்யலாம். மாதம் ஒரு தடவை யாவரும் பத்தியமில்லாமல் சாப்பிடலாம். காங்கைச் சரீரமுள்ளவர்களும் உஷ்ணதேசத்தில் உள்ளவர்களும் மனம் போனபடி யெல்லாம் சாப்பிடுவதாயிருந்தால் வயிற்றில் கட்டிகள் உண்டாயினும் உண்டாகும். ஆதலால் மேலே சொல்லியபடி சாப்பிடவும்.

தேச பந்து தாசர் செய்த தேசபக்தி செய்யுங்கள்
தேச பந்து தாசர் வைத்த தேசபக்தி வையுங்கள்
பாச பந்த நீக்குந் தெய்வ பக்தி தேச பக்தியே
மாசி லாத மோன ஞானம் வளர்க்கு மிந்தப் பக்தியே

தேசபந்து தாஸர்

(கே. எஸ். மணியன் எழுதியது.)

பிறப்பு.

இராஜபோகத்தைத் துறந்த வங்கநாட்டுத் தியாகி ஸ்ரீமான் சித்தரஞ்சன தாஸர்; இவர் 1870-ம் வருஷம் நவம்பர் ௴ 5உயன்று கல்கத்தா நகரத்திலே பிறந்தார். தாஸரது முதாதைகள் தேசத்தை ஆளும் மன்னர்களா யிருந்து வந்தார்கள் என்று பல வங்கநாட்டுப் பெரியோர்கள் இன்னும் கூறி வருகின்றார்கள். அவர்கள் தைரியம், மரியாதை, சுயேச்சை, அறிவு முதலிய அரிய குணங்கள் மிகுந்தவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். பிறர்க்கு உபகாரம் செய்யும் குணம் தாஸரது குடும்பத்துக்கே ஆபரணமாக இன்றும் விளங்கி வருகின்றது. இப்படிப்பட்ட அரியகுணங்கள் வாய்க்கப் பெற்ற குடும்பத்திலேதான் தேசபந்துதாஸர் தோன்றினார். இவரது தந்தை பாபுபூபன் மோகனதாஸர். அவர் கல்கத்தா உயர்தர நீதிமன்றத்தில் பிரசித்தி பெற்ற ஓர் அட்டர்னியாய் இருந்தார். அட்டர்னி வேலையிலிருந்துகொண்டே தாஸரின் தந்தையார் கீர்த்தியுடன் அதிகமான பொருளையும் சம்பாதித்தார்; பிறர்க்கு உபகாரம் செய்வதில் கர்ணனுயித் தமது செல்வத்தையெல்லாம் தருமவழியில் செலவு செய்தார். இப்படிப்பட்ட அருங்குணமே இவரது அருமைக் குமாரர் தேசபந்துவுக்கும் உதித்ததுபோலும். பாபுபூபன் அட்டர்னி வேலையிலேயே தமது காலத்தைக் கழிக்காமல் "பிரமோபப்ளிக் ஒபீனியன்" "வங்காளிபப்ளிக் ஒபீனியன்" என்ற இரண்டு பத்திரிகைகளுக்கும் ஆசிரிய

ராயிருந்து அவைகளை மிகுந்த திறமையுடன் நடத்தி வந்தார். பிரம்மசமாஜ இயக்கத்தில் சேர்ந்து அதற்காகவும் அவர் மிகவும் உழைத்துவந்தார். தேசபக்தியில் பாபுபூபன் சிறிதும் குறைந்தவரல்லர். தமது எளிய உறவினர்களுக்கும், மற்றவர்களுக்கும் அவர் எப்பொழுதும் வேண்டிய உதவிகளைச் செய்துவந்தார். வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்ததினால், அவருக்குக் கடன் மிகவும் அதிகமாய்க்கொண்டே வந்தது. அதன் பயனாக அவர் தமது சொத்துக்களையெல்லாம் இழந்ததுமன்றி இன்ஸால்வெண்டும் கொடுக்கும்படி நேர்ந்தது. சித்த ரஞ்சன தாஸருக்குப் பல சகோதரர்களும், சகோதரிகளும் இருக்கிறார்கள். தாஸரது சகோதரர்களில் ஒருவரான ஸ்ரீமான் பி. ஆர். தாஸர் இப்பொழுது பாடலீபுரத்து உயர்தர நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்கிறார். மற்றொரு சகோதரர் ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸர் கல்கத்தாவில் இதுவரையில் அட்வகேட் ஜெனரலா யிருந்து இப்பொழுது இந்திய அரசாங்கத்தின் சட்ட நிபுணராக வேலை பார்த்து வருகின்றார். தேசபந்து தாஸரது சகோதரிகளில் இருவர் மகாத்மாகாந்தியின் ஒத்துழையா இயக்கத்தில் சேர்ந்து உழைத்தது மறக்கக் கூடியதல்ல.

படிப்பு.

பாபுபூபருக்கு தேசபந்து தாஸர் இரண்டாவது குமாரராவர். தாஸர் இளமையில் பவானிபூரிலுள்ள லண்டன் மிஷன் கல்லூரியில் படித்து 1886-ம் வருஷத்தில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். பின்பு கல்கத்தா மாகாணக் கல்லூரியில் படித்து 1890-ம் வரு

ஷத்தில் பி. ஏ. பட்டம் பெற்றார். பிறகு ஐ. ஸி. எஸ். பரீட்சை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அதற்குப் படிப்பதற்காக அவர் இங்கிலாந்து சென்றார்.

இங்கிலாந்தில் அவரது ஊழியம்.

தேசபந்து தாஸர் இங்கிலாந்து சென்ற காலத்தில் "இந்தியாவின் பெரிய கிழவர்" என்று அழைக்கப் படும் தாதாபாய் நௌரோஜி பார்லிமெண்ட் மகா சபைக்கு ஓர் அபேட்சகராக நின்றார். தாஸர் தாதா பாய் நௌரோஜிக்குச் சாதகமாக மிகுந்த ஊக்கத் துடன் பல இடங்களில் உபந்யாசம் செய்தார். அப் பொழுது அவர் செய்த பிரசங்கங்கள் இங்கிலாந்தி லுள்ளவர்களையும்,இந்தியாவிலுள்ளவர்களையும்கண்ணைத் திறக்கும்படி செய்தன. பிறகு ஜான்மாக்ளீன் என்ற பார்லிமெண்டு அங்கத்தினர் ஒருவர் தாம்செய்த ஒரு பிரசங்கத்தில் ஹிந்துக்களையும் முகம்மதியர்களையும் தாக்கிப் பலவிதமாகத் தூஷித்துப்பேசினார். இதைக் கேட்டதும் தேசபந்து மிகுந்த ஆத்திரத்துடன் ஜான் மாக்ளீன் செய்த பிரசங்கத்தைக் கண்டிப்பதற்காக ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டி அதில் அவரைப் பலமாகக் கண்டித்துப் பேசினார். அதன் பயனாக ஜான்மாக்ளீன் தாம் செய்த பிரசங்கத்திற்கு மன்னிப்புக் கேட்கும்படி கட்டாயப்படுத்தப் பட்டதுடன், பார்லிமெண்ட் சபை யில் வகித்து வந்த அங்கத்தினர் பதவியையும் இழக் கும்படி நேர்ந்தது.

பிறகு தாஸர் அப்பொழுது பிரிட்டிஷ் பிரதம மந் திரியாயிருந்த ஸ்ரீமான் கிளாட்ஸ்டனின் தலைமை யின் கீழ் இந்தியாவின் விஷயங்களைப்பற்றி ஓர் அரிய பிரசங்கம் செய்தார். பின்பு தாஸர் தமக்கு ஏற்பட்ட சில தடைகளின் பயனாக ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குப்

படிக்காமல், பாரீஸ்டர் பரீட்சைக்குப் படித்து அதில் சிறப்புடன் தேறி 1893-ம் வருஷத்தில் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்.

பாரிஸ்டர் வேலை.

கல்கத்தா நகருக்கு வந்து சேர்ந்ததும் அவர் தமது பாரிஸ்டர் தொழிலை நடத்துவதற்கு ஆரம்பித்தார். அவரது தந்தையார், வாங்கிய கடன்களைக் கொடுக்காமல் இன்சால்வெண்டு கொடுத்தவராதலால், அது தாஸ ரது அபிவிருத்திக்கு ஒரு பெருந்தடையாயிருந்தது. தமது தந்தையின் கடன்களை அடைத்துத் தமது குடும் பத்திற்கே ஒருநல்ல பேரைத்தேட வேண்டுமென்று அவர் மிகவும் பாடுபட்டு உழைத்து வந்தார். அதன் பயனைப் பொது விஷயங்களிலும், தேச விஷயங்களி லும், கலந்து உழைக்க ஸ்ரீமான் தாஸருக்குச் சில ஆண்டுகள்வரை அவகாசம் கிடைக்கவில்லை. கல்கத்தா உயர்தர நீதிமன்றத்தில் தமக்குப் போதிய வருமானம் கிடைக்கவில்லை யென்பதை அவர் தெரிந்துகொண்ட தும், சிறிதுகாலம் வெளியூர்களுக்குச் சென்று அங்கு தமது தொழிலை நடத்தி வந்தார். தமது குடும்பத் திற்கு "இன்சால்வெண்டு குடும்பம்" என்ற கெட்ட பெயரில்லாமல் செய்துவிட வேண்டுமென்று, அவர் செய்த முயற்சிகள் அளவிடக் கூடியவைகளல்ல. குடும் பத் தொந்திரவுகளின் பயனை அவரது பெருமை பொது ஜனங்களுக்கு முதலில் சிறிதும் தெரியவில்லை.

1908-ம் வருஷத்தில், சுதேச இயக்கத்தில் உழைத்து வந்த வங்கநாட்டு மகரிஷி பாபு அரவிந்த கோஷ் முதலியவர்களின்மீது அரசாங்கத்தார் சதியா லோசனை செய்ததாக வழக்குத் தொடுத்தனர். அந்த

வழக்கில் சித்த ரஞ்சன தாஸர் பாபு அரவிந்தருக்காக ஆஜராகி மிகுந்த திறமையுடன் வாதித்தார். அவரது சட்ட ஞானமும், திறமையும் அப்பொழுது தான் வங்க நாட்டாரின் மனத்தைக் கவர்ந்தன. தாசரின் திறமை யான வாதத்தின் பயனாக பாபு அரவிந்தர் விடுதலை யடைந்தார். பாபு அரவிந்தர் விடுதலையடைந்ததும் தேசபந்து தாஸரின் கீர்த்தி எங்கும் சூரிய கிரணங்கள் போல் பரவ ஆரம்பித்தது. பிறகு தாஸர் தமது தொழிலைக் கல்கத்தா நகரிலேயே நடத்த ஆரம்பித் தார். கல்கத்தாவில் அவருக்கு நாளுக்கு நாள் வரு மானம் அதிகரித்துக்கொண்டே வந்தது. தந்தையின் கடன்களைத் தீர்த்துத் தமது குடும்பத்திற்கு ஏற்பட் டுள்ள கெட்ட பெயரை நீக்க வேண்டுமென்று தாம் செய்துகொண்ட உறுதியை அனுபவத்திற்கு கொண்டு வர அவர் ஆரம்பித்தார். சில ஆண்டுகளுக்குள் தாஸர் தமது தந்தையாருக்கு ஏற்பட்ட சுமார் பதினாறு லட்சம் (1600000) ரூபாய் கடனையும் தீர்த்துவிட்டார். பின்பு அவர் தம்மை இன்சால்வெண்டு பந்தத்தினின்று விடு தலை செய்யவேண்டுமென்று ஹைகோர்ட்டில் மனுச் செய்து கொண்டார். அப்பொழுது நீதிபதியாயிருந்த ஸ்ரீமான் பிளெட்சர், தாஸரின் மனுவை ஏற்றுக் கொண்டு, "இன்சால்வெண்டாகப் போன ஒருவரின் பழைய கடன்களை மற்றொருவர் ஏற்றுக்கொண்டு அவை களையெல்லாம் திருப்பிக்கொடுத்து இன்சால்வெண்டு பந்தத்தினின்றும் தம்மை விடுவித்துக் கொள்வது இதுவே முதல் தடவை" என்று கூறித் தேசபந்துவின் செய்கையைப் புகழ்ந்தார். இச்செய்கையின் பயனாக ஜனங்களுக்கு தாஸரிடத்தில் மிகுந்த மரியாதையும், நம்பிக்கையும் ஏற்பட்டன.

இலக்கிய ஆராய்ச்சி.

ஸ்ரீமான் தாஸர் பிறகு இலக்கிய ஆராய்ச்சியில் தமது கவனத்தைச் செலுத்தி வந்தார். 1915-ம் வருஷத்தில் அவர் தாமே "நாராயண" என்ற பத்திரிகையை நடத்த ஆரம்பித்தார். அந்தப் பத்திரிகைக்கு மகா மகோபாத்தியாய ஹரப்பிரசாத சாஸ்திரி, விபின சந்திரபாலர்போன்ற பல அறிஞர்கள் கட்டுரை எழுதி வந்தனர். தாஸரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் கவி இயற்றும் சக்தி நன்கு அமையப்பெற்ற கவிகளாய் விளங்குகிறார்கள். தேசபந்து தாஸருக்கு புதிய துறையில் கவிகள் இயற்றுவதில் அபாரமான திறமையும், சக்தியும் உண்டு.

1894-95-ம் வருஷத்தில் வங்காளி பாஷையில் பல அருங்கவிகள் அடங்கிய "மஞ்சலா" என்ற நூலை ஸ்ரீமான் தாஸர் வெளியிட்டதுமன்றி இன்னும் பல நூல்களையும் வெளியிட் டிருக்கின்றார். இவரது அறிவையும், திறமையையுங் கண்ட வங்காள இலக்கிய சங்கத்தார் ஒருவருஷம் இவரைத் தமது தலைவராகத் தெரிந்தெடுத்தனர்.

தேச சேவை.

பிறகு தாசர் நாளுக்கு நாள் தேச விஷயங்களிலும், அரசியல் விஷயங்களிலும் தீவிரமாகத் தலையிட்டு உழைக்க ஆரம்பித்தார். அவரது தேசபக்தி மாசற்றது; உண்மையானது. தற்காலத்தில் சிலர் தமது சுய நலங்கருதி தேசசேவை செய்கின்றோமெனப் பறை யடித்து வருகின்றார்கள். ஆனால் தாஸர் தமது சுய நலங்கருதித் தேசவேலையில் ஈடுபட்டாரில்லை. அவரது

சுயநலமின்மை, தியாகம், தரும சிந்தனை, தைரியம், திறமை முதலியவைகள் அவரை உலகிற்கே ஒருபெருந் தியாகியாகச் செய்துவிட்டன. அவர் ஒரு தீவிர காங்கிரஸ் வாதியாக இருந்தார். அவர் தமது தொழிலைச் செய்துவந்த காலத்திலும் தேசசேவையைச் சிறிதும் மறந்தாரில்லை. தேசத்தின் பொருட்டுத் தாம் அனுபவித்து வந்த ராஜபோகத்தைத் துறந்து, தமது தொழிலையும் விட்டு அவர் செய்துவந்த ஊழியம் என்றும் மறக்கற்பாலதன்று. அவரது தியாகம் இந்தியாவுக்கே இன்றும் ஒளியாக விளங்குகின்றது. 1917-18-ம் வருஷங்களில் அப்போதிருந்த அரசியல் நிலைமையைப்பற்றி தேசபந்து தாஸர் வங்காளமெங்கும் பல அரிய பிரசங்கங்கள் செய்தார். சென்னையில் ஸ்ரீமதி பெசண்டம்மையார் காப்பில் வைக்கப்பட்ட காலத்தில் அதைப் பலமாகக் கண்டித்த தலைவர்களுக்குள் தாஸரும் ஒருவர். அதைக்கண்டிக்க கல்கத்தா டவுன் ஹாலில் ஒரு கூட்டம் போடப்பட்டது. அதை அரசாங்கத்தார் தடுத்துவிட்டார்கள். அந்தத் தடையை தாஸர் தமது முயற்சியினால் நீக்கினார். 1917-ம் ஆண்டில் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸில் இந்தியாவுக்குச் சுய ஆட்சி கொடுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தைப்பற்றி அவர் செய்த உபந்யாசம் பலராலும் போற்றப்பட்டது.

1919-ம் வருஷம் பஞ்சாபில் நடந்த படுகொலை தாஸரின் உணர்ச்சிகளைத் தீவிரமாகக் கிளப்பிவிட்டதென்றே சொல்லலாம். அப்படுகொலையைப் பற்றி விசாரிக்கக் காங்கிரஸ் மகாசபை நியமித்த கமிட்டியில் தாஸரும் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். இக்கமிட்டியார், எல்லோரும் ஒப்புக்கொள்

ளக் கூடிய சாதாரணமான சிபார்சுகளையே செய் தனர். ஆனால் அரசாங்கத்தார் அந்தச் சிபார்சுகளை கவனிக்கவுமில்லை, ஏற்றுக் கொள்ளவுமில்லை. 1919-ம் வருஷம் டிசம்பர் மாதம் அமிர்தசரஸில் கூடிய காங்கிர ஸில் சட்டசபைகளுக்குச் சென்று அங்கு ஒத்துழை யாமையை அனுஷ்டிக்க வேண்டுமென்று தாஸர் வற் புறுத்தினார். ஆனால் அப்போது மகாத்மா காந்தி பூரண ஒத்துழைப்பையே அனுஷ்டிக்க வேண்டும் என்று கூறி னார். இறுதியில் லோகமான்ய பாலகங்காதர திலகர் பரஸ்பர ஒத்துழைப்பு முறையைக் கையாள வேண்டு மென்று வற்புறுத்தினார். இதை மகாத்மா காந்தியும், தாஸரும் ஒப்புக்கொண்டனர். இதற்குப் பிறகு ஆறு மாதம் கழித்து மகாத்மா காந்தி தமது ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்தார். 1920-ம் வருஷம் அக் டோபர் மாதம் கல்கத்தாவில் லாலா லஜபதிராயின் தலை மையின்கீழ் நடைபெற்ற விசேஷ காங்கிரஸில் தேச பந்து தாஸர் ஒத்துழையாமைக்கு விரோதமாகப் போரா டினார். ஆனால் காங்கிரஸில் அத்தீர்மானம் நிறைவேறி விட்டது. நாகபுரியில் அதே வருஷம் டிசம்பர் மாதத் தில் சேலம், சி. விஜயராகவாசாரியாரின் தலைமையின் கீழ் நடைபெற்ற காங்கிரஸில் மீண்டும் ஒத்துழையாமை வற்புறுத்தப்பட்டது. அந்தத் தீர்மானத்திற்குக் கீழ் படிந்து தாஸர் 1921-ம் வருஷம் ஜனவரி மாதம்முதல் தமது வக்கீல் தொழிலை நிறுத்திவிட்டார். தேசபந்து பிரபலமாக வக்கீல் தொழில் செய்துவந்த காலத்தில் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு இரையாகிச் சிறை சென்றவர்களின் குடும்பங்களுக்கும், நாடு கடத்தப் பட்டவர்களின் குடும்பங்களுக்கும் பொருளுதவிசெய்து

அவர்களைக் காப்பாற்றி வந்தார். எளிய மாணவர்களுக்கும், எளிய தேசத்தொண்டர்களுக்கும், மற்றவர்களுக்கும் அவர்செய்த பொருளுதவி அளவிடக்கூடியதல்ல. பொதுவாகச் சொல்லுமிடத்து அவர் வங்கநாட்டின் கர்ணனாக விளங்கினாரென்றே சொல்லலாம். அவர் செய்த உதவிகளை வங்காளவாசிகள் என்றும் மறக்க முடியாது. இத்தகைய பெரியார் திடீரென்று தமது தொழிலை நிறுத்தியதால் பலருக்கும் சங்கடம் ஏற்பட்டது.

ஒத்துழையாமை.

மகாத்மாவின் ஒத்துழையா இயக்கத்தைப் பின்பற்றித் தேசபந்து தாஸர் வங்காளத்தில் தீவிரமாக உழைத்து வந்தார். தேசபந்துவின் வீரமொழிகளைக் கேட்டு வங்கநாட்டுக் கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் பயின்றுவந்த மாணவர்களிலே பல ஆயிரக்கணக்கானவர்கள், தங்களது பாடசாலைகளை விட்டுவிட்டுத் தீவிரமாகத் தேசத்தொண்டு செய்ய முன் வந்தனர். அவர்களில் பலர் தேச சேவைசெய்கையில் சிறைக்கும் சென்றார்கள். மகாத்மாவின் ஒத்துழையாமைப் போர் இந்தியாவில் நடந்தபோதிலும், அது சிறப்பாக வங்காளத்திலேதான் நடத்தப்பட்டதென்று சொல்லலாம். தேசத் தொண்டிற்கென மகாத்மா காந்தி திரட்டிய "சுயராஜ்ய நிதிக்கு" வங்கநாட்டில் அதிகமான தொகை தாஸரின் முயற்சியினாலேதான் சேர்ந்தது. வக்கீல் வேலை பார்த்த காலத்தில் அவர் மாதம் குறைந்தது இரண்டு லட்சம் ரூபாய்கள் வரையில் சம்பாதித்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த வேலையை உதறித்தள்ளி நாட்டின் நலத்தைக்கருதி

தாஸர் செய்த ஊழியம் என்றும் மறக்கக்கூடியதல்ல. கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்ட தேசீய கல்லூரிக்கு அவர் தாம் சம்பாதித்த தொகையில் பெரும்பாகத்தை நன்கொடையாக அளித்தார். 1921-ம் வருஷம் டிசம்பர் மாதம் தேசபந்து தாஸர் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டார். 1922-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் அரசாங்கத்தார் அவருக்கு ஆறுமாதம் சிறைவாச தண்டனை விதித்தார்கள். இந்தத் தண்டனையைத் தேசத்தின் பொருட்டு அவர் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார். சிறைச்சாலையில் ஆறுமாத காலம் அவர் பல கஷ்டங்களை உற்சாகத்துடன் அனுபவித்தார்.

காங்கிரஸ் தலைமைப் பதவி.

அவரது தியாகத்தையும், தேச சேவையையும் பாராட்டுவதற்கு அறிகுறியாக இந்தியர்கள் 1922-ம் வருஷம் டிசம்பரில் கயையில் நடந்த காங்கிரஸுக்கு அவரையே தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். தேசபந்து தாஸர் அந்தக் காங்கிரஸில் தலைமை வகித்துத் தமது உபந்யாசத்தில் பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்தியா அடைந்துள்ள நிலைமையைப்பற்றி விளக்கிக்கூறி அந்த நிலைமையை மாற்றுவதற்கு இந்தியர்கள் செய்யவேண்டிய காரியங்கள் எவை என்பதையும் நன்கு விளக்கினார். அதற்குப் பிறகு சுயராஜ்பக் கட்சியை அவர் ஏற்படுத்தினார். காங்கிரஸ் மகாசபை விஷயத்தில் அவருக்கு மிகுந்த பக்தியும், அன்பும் உண்டு. எனவே அவர் தமது கட்சியைக் காங்கிரஸிலிருந்து பிரிக்காமல், அதை காங்கிரஸின் ஓர் அம்சமாக இருக்கும்படி செய்தார். பிறகு வங்காள மாகாணச் சட்டசபையில் தாஸர் அங்கம் பெற்று, அங்கு இரட்டையாட்சி முறைகள் நடை

பெருமல் ஸ்தம்பித்துப் போகும்படி பல தீர்மானங்களை நிறைவேற்றினார். இதை யொட்டி மத்திய மாகாணத்திலும் இவரது கட்சியினர் இரட்டை ஆட்சி நடை பெருமல் செய்துவிட்டார்கள். சென்ற வருஷம் டிசம்பர்மீ பெல்காமில் மகாத்மா காந்தியின் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸுக்கு அவர் விஜயஞ்செய்து அகில இந்திய புஸ்தகசாலை மகா நாட்டிற்குத் தலைமை வகித்தார்.

தேக நிலை.

பெல்காம் காங்கிரஸுக்குச் சென்று வந்தபிறகு தாஸர் நோயினால் பீடிக்கப்பட்டு அதன் பயனாக பல கஷ்டங்களை அனுபவித்தார். பின்பு சிறிதுகாலம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் பாடலீபுரத்தில் தமது சகோதாருடைய இல்லத்தில் சிலகாலம் தங்கியிருந்தார். இவ்வருஷம் மார்ச்சுமாதம் நடைபெற்ற வங்காள சட்டசபைக் கூட்டத்திற்கு நோயினால் பீடிக்கப்பட்டிருந்த இவரை ஒரு நாற்காலியில் தூக்கி வந்தார்கள். தாஸரின் விஜயத்தின் பயனாக அந்தக் கூட்டத்தில் வங்காள மந்திரிகளின் சம்பளம் நிராகரிக்கப்பட்டது. இந்த விஷயம் எல்லோருக்கும் ஞாபகமிருக்குமென்பதில் ஐயமில்லை.

மேயர்பதவி (நகரச் சபைத்தலைவர்.)

கல்கத்தா நகர சபையை சுயராஜ்யக் கட்சியினர் கைப்பற்றியதும், தேசபந்து தாஸரே மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் முதலாக இந்தியரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் ஸ்ரீ தாஸரேயாவர். இவர் மேயராக இருந்தபொழுது கல்கத்தா நகரவாசிகளின்

நன்மைகளைக் கருதி அநேக காரியங்களைச் செய்தார். பொது ஜனங்களின் வரிப்பணம் வீணான வழிகளில் விரயமாகாதபடி தடுத்துவந்தார். பொதுவாகச் சொல்லுமிடத்து அவர் கல்கத்தா நகருக்கே தந்தையாக விளங்கினார்.

சமீபத்தில் பரீத்பூரில்கூடிய வங்காள மாகாண மகா நாட்டுக்கு ஸ்ரீ தாஸர் தலைமை வகித்துச் செய்த பிரசங்கம் இன்னும் இந்தியரின் மனதில் இருந்து கொண்டே யிருக்கின்றது.

மரணம்

இதற்குப் பிறகு தேக சௌக்கியத்தின் பொருட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளுவதற்காக அவர் டார்ஜிலிங்கு சென்று அங்கே சிலகாலம் தங்கியிருந்தார். ஆனால் நமது துர்அதிர்ஷ்டத்தின் பயனாக அவர் திடீரென்று (16-6-25) செவ்வாய்க்கிழமையன்று மாலையில் ஆண்டவன் பொன்னடி நிழலை அடைந்தார்.

அவரது பெருமை

தேசபந்து தாஸர் தமது நாட்டிற்காகப் பொன்னையும் கொடுத்தார்; பொருளையும் இழந்தார்; தாம் அனுபவித்துவந்த ராஜபோகத்தைத் துறந்தார்; தாமும் சிறைக்குச் சென்றார்; தமது ஒரே அருமைப் புதல்வன் சிரரஞ்சன தாஸையும், உத்தம மனைவியான ஸ்ரீமதி வஸந்தாதேவியையும் சிறைக்கு அனுப்பினார்; தமது வக்கீல் தொழிலையும் உதறித் தள்ளினார்; கடைசியில் தமது உயிரையும் தேசத்திற்காக அர்ப்பணம் செய்தார். அவர் தமது மாளிகையையும் தேசத்தின் பொது உபயோகத்திற்காக விருப்புடன் அளித்தார். வங்கநாட்டுக்

கற்பகமாய் விளங்கிய இப்பெரியாரது மரணம் இந்நாட்டிலுள்ள எல்லோரையும் கதறும்படி செய்துவிட்டது. தேசத்திற்கு பந்துவாயிருந்த தாஸர், ஏழைகளுக்குப் பந்துவாயிருந்த தாஸர், தேசத்திற்காகவே இருந்தார்; எளியவர்களின் நன்மைக்காகவே உழைத்தார்; தேசத்திற்காகவே இறந்தார். தேசபந்து தேச ஊழியத்தையே தமது தொண்டாகக்கொண்டவர்; தேசத்தையே தெய்வமெனப் போற்றிவந்தவர். தேசத்திற்கு ஊழியம் செய்வது கடவுளுக்குத் தொண்டுசெய்வதாகுமென அவர் அடிக்கடிசொல்லுவது வழக்கம். அவர் சம்பாதித்த பொருளெல்லாம் மற்றவர்களுக்கே உபயோகப்பட்டன. அவர் எத்தனையோ எளிய மாணாக்கர்களை ஆதரித்துக் காப்பாற்றி வந்தார். எத்தனையோ குடும்பங்களை அவர் ரட்சித்தார். அநேகம் தேசபக்தர்களைப் பாதுகாத்து வந்தார். அவரது வீரமும், தியாகமும், கொடையும் எண்ணிறந்தவை. அவைகளை விரிக்கிற் பெருகும். அவர் சிறைக்குச் சென்றபொழுது கூறிய வார்த்தைகள் எவருக்குத்தான் ஊக்கத்தையும், உணர்ச்சியையும்அளிக்கா.

"கைவிலங்குகள் என் மணிக்கட்டுகளில் இருப்பதை நான் உணர்கிறேன். என்தேகம் இரும்புச் சங்கிலிகளினால் பிணிக்கப்பட்டிருப்பதையும், நான் அறிகிறேன். பந்தத்தின் துயரம் இதுவே. இந்தியா முழுவதும் ஒரு பெருஞ் சிறைச்சாலையாகவே எனக்குத் தோன்றுகின்றது. காங்கிரஸ் வேலைகள், தேசவேலைகள் எப்படியாவது நடைபெறல் வேண்டும். நான் சிறையில் இருந்தால் என்ன? சிறைக்கு வெளியில் இருந்தால் என்ன? உயிருடன் வாழ்ந்தாலென்ன? இறந்து பட்டாலென்ன?"

மதம்.

மதவிஷயங்களில் தேசபந்து தாஸர் சைதன்யரின் வைணவ மதத்தைச் சேர்ந்தவர். தாஸரது குடும்பத்தார் எல்லோரும் விஷ்ணு பக்தர்கள்தான். தேசபந்து தாஸரும் தமது தந்தையைப்போல் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்து அதற்காக மிகவும் உழைத்து வந்தார். ராஜா ராம் மோகன்ராய் என்ற பெரியாரிடத்தில் தாஸருக்கு அளவுகடந்த அன்பும் பக்தியும் உண்டு. அவரது வழிகளைப்பின்பற்றி நடப்பதில் தாஸருக்கு அளவற்ற ஆசையுண்டு. மேல்நாட்டார் நமது கல்வி, மதம் முதலியவை அழிக்கச்செய்து வரும் சூழ்ச்சிகளை அவர் மிகவும் கண்டித்து வந்தார். இப்படிப்பட்ட பெரியாரைப் போல் பலர் இந்த நாட்டைத் தட்டியெழுப்ப முன்வர வேண்டுமென்பது எல்லோருடைய பிரார்த்தனை. இப்பெரியாரது வழிகளைப்பற்றி நாம் உழைத்து வந்தால் நமது நாடு மேன்மையுறும். நமது பண்டைத் தொழில்கள் விருத்தியடையும். நமது நாட்டின் பொருளாதாரம் வளம்பெறும். நாட்டைப் பீடித்துள்ள வியாதியும், கஷ்டங்களும் ஒழிந்துபோம்.

வந்தேமாதரம்

சுபம்.

மழை ஜலம் சுத்தமானது. ஆயினும் அது விழும் இடத்திற் கேற்றபடி மாறுபாடடையும். அதுபோல் இயற்கையில் பரிசுத்த மனமுடையவரும் தாம் சேருமிடத்தைப்போல் குணத்தில் மாறுபாடடைவர். அதனாலே தான் ஔவையார் "சேரிட மறிந்துசேர்" என்று போதித்தார்.

மங்கையர்க்கரசி

கற்பின் மகிமை

தற்கால கற்புக்கரசியின் உண்மைச் சரிதை

'அமிர்தபஜார், பத்திரிகையில் கீழ்க்கண்ட வியக்கத் தக்க விபரம் வெளியிடப்பட்டிருக்கின்றது:—கோபால் கன்ஜ் சப் டிவிஷனைச் சேர்ந்த ஹாஜியபூர் கோத்ரி யாவில் வசித்துவந்த ஸ்ரீஜத்பாபன்சிங் என்பவர் சில காலமாக தேக அசௌக்கியமாயிருந்தார். அப்பிணி யாளர் படுத்திருந்த படுக்கைக் கருகிலுள்ள சுவரில் ஒரு சிறு துவார மிருந்தது. ஒருநாள் ஸ்ரீ ஜத்பாபன் சிங் தம்மருகிலிருந்தவர்களை அச்சிறு துவாரத்தை அடைத்து விடும்படிக்கும் இன்றேல் அதன் வழியாகப் பாம்பொன்று வந்து தம்மைக் கடித்துக் கொன்றுவிடு மென்றும் கூறினர். அவர்கள் அவர் கூறியதை அவர் நோயின் கொடுமையால் பித்தம் பிடித்தவர்போல் உளறு கின்றார் எனக் கருதி அலட்சியஞ்செய்து விட்டமையால் அந்தத் துவாரம் அடைக்கப்படாமலே இருந்தது. ஆனால், பின்னர் எப்படியோ ஆச்சரியப்படத் தக்க வாருகப் பாம்பொன்று அந்தச்சிறுதுவாரத்தின் வழியே வெளிவந்து அவரைக் கடித்துவிட்டது. பாபன் பாபு அப்பாம்பைச் சின்னபின்னமாகக் கிழித்தெறிந்து விட்டாரெனினும் விஷந்தலைக்கேறி மறுநாட் காலை மரணமடைந்தார். அவருடைய பத்தினி அவரிடம் அள வற்ற அன்புகொண்டிருந்தார். ஸ்ரீஜத் பாபன் சிங்கின் பிரேதத்தைத் தகனம் செய்வதன்பொருட்டு மயா னத்துக்குக் கொண்டுபோவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது அவருடைய தர்மபத்தினி தமது கண்களில் ஒரு துளிகண்ணீருமின்றித் தமது கணவனின் தலையைத் தம்மடிமீது வைத்துத் தம்மையும் அவருடன் சேர்த்துத் தகனம் செய்துவிடும்படி வேண்டிக்கொண் டார். பின்னர் அவர் தமது கணவனின் பிரேதத்தை விட்டு அப்புறம் செல்ல மறுத்துவிட்டமையால் பிரே தத்தை மயானத்திற்குக் கொண்டு போவதற்கு முன்பே அவ்வம்மையைப் பலாத்காரமாய் ஓர் அறையிலே தள்ளிப்

பூட்டிவைக்க வேண்டியதாயிற்று. மயானத்திலோ எவ்வளவுமுயற்சி செய்யப்பட்ட போதிலும் அப்பிரேதம் பாதிக்குமேல் வேகவேயில்லை.

ஆயினும் உத்தமியான அக்கற்புக்கரசி தம்மிடமிருந்த ரூபா 700யும், மற்றும் கதர் துணிகளையும் பிராமணர்களுக்குத் தானம் செய்தார். இவ்வம்மை இந்தச் சாமான்களுக்கருகே கடிதமொன்றெழுதி வைத்துவிட்டுக் கையில் இராமாயணமேந்தி தர்ப்பாசனத்தின் மீது உட்கார்ந்தார். உடனே அவருடைய தேகத்திலிருந்து தானாகவே நெருப்பு வெளிப்பட்டு அவருடைய கால் முதல் மார்புக்குமேல் சிறிதுபாகம் வரை எரிந்து சாம்பலாய்விட்டது. அவருடைய உடலில் பாதி எரிந்து சாம்பலாகிவிட்ட போதிலுங்கூட அவ்வம்மை உட்கார்ந்த நிலையிலேயே இருக்கக் காணப்பட்டார். அவருடைய கைகளில் ஒன்று அவருடைய மோவாய்க் கட்டையைத் தாங்கிக் கொண்டிருந்தது. அவர் வீற்றிருந்த தர்ப்பாசனமும் அருகில் பூமியில் விழுந்து கிடந்த ஸ்ரீராமாயணமும் சிறிதும் நெருப்பால் பாதிக்கப்படவே யில்லை. மேலும் அவருடைய முகத்தில் புன்னகை விளங்கியது. இதனைக் கேள்விப்பட்டு, அநேக வக்கீல்களும், மோந்தார்களும், பாணியர்களும் கோபால் கன்ஜுக்குச் சுமார் ஒருமைல் தூரத்திற்குள்ளாகவிருக்கும் அவ்விடத்திற்குப் பெருந்திரளாக விரைந்து சென்று அவ்வற்புதக் காட்சியைத் தமது கண்ணாரக் கண்டனர். முடிவில் தீக்கிரையாகாமலிருந்த அவ்வம்மையின் உடலின்மேல் பாகம் "ஸ்ரீ காளிஜி"யின் முன்பாகக் கொண்டு போகப்பட்டது. பின் அவருடைய கணவனின் உடற்சாம்பலைக் கொண்டு வந்து அவ்வம்மையின் மீதுதெளிக்கப்பட்ட உடனே அவ்வம்மையின் உடலிலிருந்து மீண்டும்தானாகவே தீ வெளிப்பட்டு அவ்வுடலையும் எரித்துச் சாம்பலாக்கியது. இக்காட்சியைப் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் பார்த்து மகிழ்ந்து வியந்தனர்.